

# டார்வின் தினம் 2023
# 12 பிப்ரவரி

TNSF

## பாக்டீரியா கொல்லி எதிர்ப்பாற்றல் காரணம் என்ன?

விழிவெண்படல அழற்சி, சிறுநீர்ப் பாதை நோய்த்தொற்று, மற்றும் காசநோய் போன்ற நோய்களை மனிதர்களில் பாக்டீரியாக்கள் விளைவிக்கும்.

எதிர்ப்பாற்றல் இல்லாத பாக்டீரியா

கொல்லி மருந்து Aக்கு எதிர்ப்பாற்றும் பாக்டீரியா

இந்த பாக்டீரியாக்கள் உங்கள் உடலுக்குள் புகுந்து, பெருகி, உங்களின் உடல்நலத்தை மோசமடையச் செய்யும்.

பாக்டீரியா கொல்லி மருந்து A என்றொன்றை எடுக்கச் சொல்லி மருத்துவர் பரிந்துரைக்கிறார்.

பெரும்பாலான பாக்டீரியாக்களை கொல்லி மருந்து A கொன்று விடுகிறது.

ஆனால், கொல்லிமருந்து Aக்கு எதிர்ப்பாற்றும் பாக்டீரியா பிழைத்துவிடும்.

இந்த பாக்டீரியாக்கள் உங்களிடமிருந்து வேறொருவருக்கு பரவலாம். அவர் வேறொருவருக்கு பரப்பலாம். இப்படியாக பரவிக்கொண்டே இருக்கலாம் . . .

நீங்கள் குணமடைகிறீர்கள்!

ஒரு நபரின் உடலுக்குள் புகுந்திடும்போது, இந்த பாக்டீரியாக்கள் பெருகி தீவிரமான நோயை உண்டாக்கும்.

அதே கொல்லி மருந்து Aஐ மீண்டும் மருத்துவர் பரிந்துரைக்கிறார்.

கொல்லி மருந்து A மிகச்சில பாக்டீரியாக்களையே கொல்லும்.

கொல்லிமருந்து Aக்கு எதிர்ப்பாற்றும் பாக்டீரியாக்கள் நிறைய பிழைக்கும்.

பாக்டீரியா கொல்லிமருந்து Aக்கு எதிர்ப்பாற்றும் பாக்டீரியாக்களின் பரிணாம வளர்ச்சியை இயற்கைத் தேர்வு விளைவிக்கிறது. இந்த பாக்டீரியாக்கள், கொல்லிமருந்து A நிறைந்திருக்கும் சூழலில் பிழைக்குமாறு தன்னை தகவமைத்துக் கொண்டுள்ளன.

வேறொரு பாக்டீரியா கொல்லிமருந்து Bஐ எடுக்கச்சொல்லி மருத்துவர் குறித்துக்கொடுத்து அந்த நபரின் உடல் நலம் சரியாகிறது. பாக்டீரியாக்களை கொல்லும் மருந்துகள் A மற்றும் B இரண்டிற்குமே எதிர்ப்பாற்றும் பாக்டீரியாவால் ஒருவர் பாதிக்கப்பட்டிருந்தால் என்ன நடக்கும்?

இந்த நபர் தொடர்ந்து உடல்நலம் சரியில்லாமல் இருக்கிறார்...

மருத்துவர் குறித்துக்கொடுக்கும், பரிந்துரைக்கும் (பாக்டீரியா கொல்லி) மருந்துகளை மட்டுமே எடுத்துக்கொள்ளவேண்டும்!

டார்வின் தினம் 2023 வளங்கள்